©
தமிழ்நாடு அரசு
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 17] சென்னை, புதன்கிழமை, மே 2, 2012
சித்திரை 20, திருவள்ளுவர் ஆண்டு—2043

## பகுதி II—பிரிவு 1 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

---

**வேளாண்மைத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 94, வேளாண்மை (A.P-2)த் துறை, நாள்: 15 ஜூன் 2011.]*

1966 ஆம் ஆண்டு விதைகள் (மத்தியச் சட்டம் 54/1966) சட்டத்தின் 4 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், திண்டுக்கல், தேனி, கடலூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, சிவகங்கை, இராமநாதபுரம், வேலூர், திருவள்ளூர், நாமக்கல், திருவாரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, கரூர், திருவண்ணாமலை, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய இடங்களில் உள்ள விதை ஆய்வுக்கூடங்களை அரசு விதை ஆய்வுக்கூடங்களாக இதனால் அறிவிக்கிறார்.

*[அரசாணை (நிலை) எண் 94, வேளாண்மை (AP2)த் துறை, நாள்: நாள் 5 ஜூன் 2011.]*

1966 ஆம் ஆண்டு விதைகள் (மத்தியச் சட்டம் 54/1966) சட்டத்தின் 12 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், திண்டுக்கல், தேனி, கடலூர், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, சிவகங்கை, இராமநாதபுரம், வேலூர், திருவள்ளூர், (சென்னை மாவட்டத்தின் அதிகார எல்லை முழுவதும்), நாமக்கல், திருவாரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், (அரியலூர் மாவட்டத்தின் அதிகார எல்லை முழுவதும்), புதுக்கோட்டை, கரூர், திருவண்ணாமலை, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் விதை ஆய்வுக்கூடத்தில் முதுநிலை வேளாண் அலுவலர் ‘‘விதை பகுப்பாய்வாளர்’’ ஆக இருப்பார் என்றும், அந்தந்தந்த மாவட்டத்தின் அதிகார எல்லையில், அவர்களுடைய அதிகாரத்தைச் செலுத்த வேண்டும் என்றும் இதனால் அறிவிக்கிறார்.

**கே. அருள்மொழி,**
*வேளாண்மை உற்பத்தி ஆணையாளர் மற்றும்*
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 244, வேளாண்மை (A.P-3)த் துறை, நாள்: 19 டிசம்பர் 2011.]*

1985 ஆம் ஆண்டு உரக் (கட்டுப்பாடு) ஆணையின் 29 ஆம் பகுதியைச் சேர்ந்த 1(A) துணைப் பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், திருச்சிராப்பள்ளியில் உள்ள உயிரி உர தரக்கட்டுப்பாட்டு ஆய்வுக்கூடம், மேற்சொன்ன பகுதியின் நோக்கத்திற்கான ஆய்வுக்கூடமாக இருக்கும் என்று இதனால் அறிவிக்கிறார்.

.

**சந்தீப் சக்சேனா,**
*வேளாண்மை உற்பத்தி ஆணையாளர் மற்றும்*
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.